بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** *(அய்யதஹுல்லலாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

February 14 2014

**தமிழாக்கம் : முஅல்லிம் M. நிஸாமுத்தீன் சாஹிப்**

# உண்மையின் அடையாளங்கள்

***தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:***

இன்று நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அடையாளங்கள் சம்பந்தமாக சில விஷயங்களைக் கூறுவேன். அது, அவர்கள் தமது அடையாளங்கள் தொடர்பாக தாமே குறிப்பிட்டவையாகும். இது தொடர்பாக ஓர் அடிப்படையான விஷயத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள். வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்ற – வெளிப்பட்ட – வெளிப்பட இருக்கின்ற அடையாளங்கள் அனைத்தின் அசல் நோக்கம், அன்னார் மூலமாக அல்லாஹ் இவ்வுலகில் இஸ்லாத்தின் உண்மையை வெளிப்படுத்துவதற்காக விரும்புகின்றான். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தகுதியை இவ்வுலகில் வெளிப்படுத்த விரும்புகிறான் என்பதே ஆகும். இந்த அடையாளங்கள் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்களின் வாயை அடைக்கின்ற அதே நேரத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைக்கும் ஆதாரங்களாகும். அவர்களை இஸ்லாத்தின் இரண்டாவது பரவுதலுக்காக அல்லாஹ்வின் வீரராக அல்லாஹ் இவ்வுலகில் அனுப்பினான்.

இப்போது பராஹீனே அஹ்மதிய்யாவின் ஒரு மேற்கோளை எடுத்து வைக்கிறேன். அதிலிருந்து அன்னாரின் விளக்கங்களையும் அதன் உயிரையும் புரிந்து கொள்ள முடியும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இந்த எல்லா ஏற்பாடுகளும் உண்மையிலேயே உண்மையைத் தேடுபவர்களுக்கு முழுமையான புரிதல் ஏற்படுவதற்காகவும், எல்லா பரக்கத்துகளும், ஒளிகளும் இஸ்லாத்தோடு அடைக்கப்பட்டு விட்டன என்பதைப் புரிய வைப்பதற்காகவுமே தோன்றியுள்ளன. மேலும் இக்காலத்தில் இறை மறுப்பாளர்கள் மற்றும் அவர்களின் சந்ததிகள் மீது இறைவனது சான்றுகள் பூர்த்தி அடையச் செய்யவும், ஒவ்வொருவரின் இயல்பின் நிலையும், ஒவ்வொருவரின் தகுதியின் நிலையும் வெளிப்பட்டு, இருளின் மீது நேசமும், ஒளியின் மீது பகைமையும் கொண்டவாறு ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களுடைய உயர் தகுதியை மறுத்து மேன்மை தாங்கிய அப்பெருந்தைகயின் மீது அசுத்தமான வார்த்தைகளை தமது வாயில் கொண்டு வருகின்ற, அம்மனிதப் பெருந்தைகயின் மீது உண்மையற்ற அவதூறு கூறுகின்ற அம்மக்கள், அறியாமையால் மிக மிக அவநம்பிக்கை கொண்டவர்களாக இருந்ததால் அன்னாரின் தகுதியினை உணரவில்லை. அவர்களின் ஒளி சூரியனைப் போன்று உலகில் தனது ஒளிப்பிழம்புகளை வீசிக் கொண்டிருக்கிறது. ஒளி வீசிக் கொண்டிருக்கும் இந்த உண்மை எழுத்துக்களின் மூலம் இஸ்லாத்தின் மகிமையும் பொலிவும் எதிரிகளிடமிருந்தே ஒப்புக் கொள்ளப்படவும், உண்மையின் வேட்கை உள்ளோருக்கு நிரூபணத்தின் வழி திறக்கவும், மூளையின் திறன் உள்ளவர்களின் திறன் அதிகரிக்கவும், மேலும் எனது (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)அவர்களது) இல்ஹாமையும் ஆன்மீகக் காட்சிகளையும் எழுதுவதன் காரணம் மூஃமின்களின் ஈமானிய சக்தி அதிகரிக்கவும், அவர்களின் உள்ளங்களுக்கு உறுதிப்பாடும் ஆறுதலும் கிடைக்கவும், அவர்கள் இந்த சத்தியத்தை முழுமையான உறுதியுடன் புரியவும், ஸிராத்தே முஸ்தகீம் என்பது இஸ்லாம் மட்டும் தான் என்றும் வானத்தின் கீழ் ஒரே நபியும், ஒரே வேதமும், தான் அதாவது எல்லா நபிமார்களை விட உயர்வான, முழுமையான, நிறைவான, காத்தமுல் அன்பியாவும், மனிதர்களுள் சிறந்தவருமாக இருந்த ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் தான் என்றும். அவர்களைப் பின்பற்றுவதன் மூலமே இறைவன் கிடைக்கிறான் என்றும், இருளின் திரைகள் விலகும் என்றும் அவர்கள் மூலமே உண்மையின் தாக்கம் இந்த உலகில் வெளிப்படும் என்றும், திருக்குர்ஆன் உண்மையான, முழுமையான நேர்வழியை உள்ளடக்கியது என்றும் அதன் மூலமே உண்மையான நன்மையும் இறை ஞானங்களும்

வெளிப்படுகின்றன என்றும், மனிதனின் கவனமின்மை மற்றும் ஐயங்கள் என்ற திரைகள் அகன்று நிச்சய உறுதி என்னும் நிலை வரை மனிதன் சென்றடைகின்றான் என்றும் காட்டுவதே நமது இல்ஹாம் மற்றும் ஆன்மீகக் காட்சிகளை எழுதுவதன் நோக்கம், மேலும் அந்நிய மதத்தினரின் ஐயங்களையும் அகற்றி, எப்போதும் முஸ்லிம்களின் கையில் ஓர் உறுதியான சான்று இருப்பதற்காகவும் தாழ்ந்த, இறை உணர்வற்ற, கருமையான உள்ளத்தை உடைய மனிதன் அநீதியான முறையில் முஸ்லிம்களுடன் சண்டைக்கு நிற்கிறான். தானும் சரிசமம் என்று காட்டுகின்றான். அத்தகையவனை தோல்விக்குள்ளாக்கவும், பதிலற்றுப் போகவும் செய்வதும் மக்களிடம் எப்போதும் அது நிரூபணமாகிக் கொண்டே இருப்பதும், நமது இல்ஹாம் மற்றும் ஆன்மீகக் காட்சிகளை எழுதுவதன் நோக்கமாகும். இருள், வழிகேட்டின் நச்சுக்காற்று இன்று வீசுகிறது. அதன் விஷத்திலிருந்து தற்காலத்தின் உண்மையைத் தேடுபவர்களும் மேலும் வருங்கால சந்ததிகளும் பாதுகாக்கப்படவும் இது செய்யப்படுகிறது. ஏனெனில் இந்த இல்ஹாம்களில் வருங்காலத்தோடு தொடர்புடைய பல விஷயங்கள் வரும்.

எனவே இந்தக் காலம் கடந்த பிறகு ஒரு புதிய உலகம் திரையை அகற்றிக் காட்டும். இந்த நூலில் கூறப்பட்டுள்ள விஷயங்களை அப்போது உலகம் தமது கண்களால் காணும். அப்போது ஈமானை வலுவூட்டுவதற்கு இந்த முன்னறிவிப்புகள் மிகவும் பயன் தருபவையாக விளங்கும் இன்ஷா அல்லாஹ். இது பராஹீனே அஹ்மதிய்யாவின் மேற்கோள் ஆகும். முதல் நான்கு பாகங்களில் உள்ளது. அவர்கள் கூறிய அந்த இல்ஹாம்கள் முன்னறிவிப்புகள் அக்காலத்திற்கு மட்டும் உரியதல்ல. மாறாக, இதனால் வருங்கால சந்ததிகளும் பாதுகாப்பாக இருக்கும். அதை நினைவில் கொள்ளுங்கள் என்று கூறுகின்றார்கள். இந்த பல முன்னறிவிப்புகள் எதிர்காலத்தில் வெளிப்பட இருப்பவையாகும்.

அவர்களது இந்த முன்னறிவிப்புகள் அவர்கள் தமக்காக எழுதவில்லை. இஸ்லாத்தின் உண்மையை நிரூபிப்பதற்காக எழுதியவை ஆகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அந்தஸ்தை உலகிற்கு எடுத்து வைப்பதற்காக – நமக்கு எடுத்து வைப்பதற்காக செய்யப்பட்டவையாகும். எனவே இதனை விளங்காமல் ஆட்சேபனை செய்கின்றனர். இவ்வாறு இல்ஹாம் வந்துள்ளதே! உருது, ஆங்கிலம், அரபி என்றெல்லாம் இல்ஹாம் வருகிறதே! என்கின்றனர். இறைவனுக்கு எந்தக் கட்டுப்பாடும் விதிக்க முடியாது. இறைவனின் விருப்பம் அவன் விரும்பிய மொழியில் ஒரே நேரத்தில் ஒரு விஷயத்தை **2–3–4** மொழிகளில் கூற இயலும். எவ்வாறிருப்பினும், இல்ஹாமாக வந்தவை அனைத்தும் நிறைவேறியதற்குச் சாட்சியாக பிறரும் இருக்கின்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைகள் அதன் மூலம் வெளிப்பட்டன. ஆன்மீகக் கண்கள் கொண்டவர்களுக்கு பராஹீனே அஹ்மதிய்யா இன்றும் ஓர் அடையாளமாகும். இதில் விளக்கப்பட்ட கருத்துக்கள் ஈமானை அதிகரிக்கக் காரணமாக அமைகின்றன. எனவே இந்த விஷயங்கள் உண்மையாவதை வருங்கால சந்ததிகள் பார்ப்பார்கள் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும் போது நிச்சயமாக ஈமானுக்கு வலு கிடைக்கிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இயற்றிய நூல்கள் நேர்வழிக்குக் காரணமாக அமைகின்றன. அது மட்டுமின்றி ஓர் அடையாளமும் ஆகும். எவரது உள்ளம் குருடாக உள்ளதோ அவர்களுக்கு அன்னாரின் ஞானங்கள் அடையாளங்கள் புலப்படுவதில்லை; புரிவதில்லை.

அல்லாஹ்விடமிருந்து அறிவிக்கப்பட்டு அவர்கள் முன்னறிவிப்பு செய்கிறார்கள். அதைப் பற்றி கூறியவாறு அவர்கள் கிஷ்தி நூஹில் கூறுகிறார்கள்:

இறைவன் எனக்கு அறிவித்த மறைவான விஷயங்கள் தமது காலத்தில் நிறைவேறின. அவை பத்தாயிரத்திற்கும் குறைவானவை அல்ல. அவற்றுள் நுஸூலுல் மஸீஹ் என்ற அச்சாகிக் கொண்டிருக்கிற நமது நூலில் ஒரு நூற்றைம்பது அடையாளங்களை ஆதாரமாகவும் சாட்சியாகவும் இருக்கும் பொருட்டு எழுதியுள்ளோம். முழுமையாக நிறைவேறாத அல்லது அதன் ஒரு பகுதி அல்லது இரு பகுதி நிறைவேறாத எந்த முன்னறிவிப்பும் இல்லை. ஒருவர் தேடித்தேடி மரித்தாலும் சரி, எனது வாயிலிருந்து வந்து அது நிறைவேறாமல் போய் விட்டதாக ஒரு முன்னறிவிப்பையும் காட்ட முடியாது. மாறாக வெட்கமில்லாமலோ, அறியாமலோ அவர் என்ன பேச விரும்புகிறாரோ பேசட்டும்! நான் வாதிட்டுக் கூறுகிறேன். எனது ஆயிரக்கணக்கான முன்னறிவிப்புகள் மிகத் தெளிவாக நிறைவேறி விட்டன. அதற்கு இலட்சக்கணக்கான மக்கள் சாட்சியாக உள்ளனர். அதற்கு முன்னுதாரணத்தைக் கடந்த கால நபிமார்களிடம் தேடினால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைத் தவிர வேறெந்த நபியிடமும் கிடைக்காது. நமது எதிரிகள் இந்த முறையில் முடிவெடுத்தால் அப்போது அவர்களின் கண் திறக்கும். நான் அவர்களுக்கு ஒரு பெரிய வெகுமதியைத் தரவும் தயாராக உள்ளேன். உலகில் இதுபோன்று முன்னறிவிப்பு செய்த ஒருவரை அவர் காட்டட்டும்! வெறும் விஷமத்துடன், மூடத்தனமாக இன்ன முன்னறிவிப்பு நிறைவேறவில்லை என்று கூறுவது தப்பெண்ணம் மற்றும் தீய எண்ணத்தின் காரணமாகவே இவை கூறப்படுகின்றன என்பதைத் தவிர்த்து நாம் வேறென்ன கூற முடியும்?

ஒரு சபையில் இதனை ஆய்வு செய்யும் நோக்கத்தில் உரையாடினால் அவர்கள் தமது கூற்றைத் திரும்பப் பெற நேரிடும் அல்லது அவர்கள் வெட்கமற்றவர்கள் என அழைக்கப்படத் தகுதி பெற்று விடுவர். ஆயிரக்கணக்கான முன்னறிவிப்புகள் அப்படியே நிறைவேறுவதும், அது நிறைவேறியதற்கு ஆயிரக்கணக்கான சாட்சிகளைக் கொண்டிருப்பதும் சாதாரணமான விஷயமல்ல. அது இறைவனை காட்டித் தருவது போன்றதாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தைத் தவிர உலகில் வேறு எக்காலத்திலாவது ஆயிரக்கணக்கான முன்னறிவிப்புகள் செய்யப்பட்டு, அவை அனைத்தும் பட்டப்பகல் போன்று வெளிச்சமானதாகவும், ஆயிரக்கணக்கானோர் அது நிறைவேறியதற்கு சாட்சி பகரவும் செய்த சம்பவங்களைக் காண முடியுமா? இறைவன் நெருங்கி வந்து வெளிப்படுவதையும், மேலும் நூற்றுக்கணக்கான மறைவான விஷயங்களை தனது அடியாரிடத்து வெளிப்படுத்துவதையும் இக்காலத்துடன் ஒப்பிடும் போது கடந்த காலத்தில் மிகக் குறைந்த அளவே முன்மாதிரிகள் கிடைக்கும் என்று நான் நன்றாகவே அறிவேன்.

நுஸூலுல் மஸீஹ் –ன் இந்த முன்னறிவிப்புகளைப் பற்றி அன்னார் கூறியதில் மூன்று நான்கை முன்மாதிரியாக நான் தந்துள்ளேன். அன்னார் கூறுகின்றார்கள்:

يَا أَحْمَدُ فَاضَتِ الرَّحْمَةُ عَلَى شَفَتَيْكَ

பொருள்: அஹ்மதே உமது உதடுகளின் மீது ரஹ்மத் வழங்கப்படும். பொருட்செறிவும், சொற்செறிவும், இறை ஞானமும் உண்மையும் வழங்கப்படும். (பராஹீனே அஹ்மதிய்யா பக்கம் 517 –ல் பாருங்கள்)

ஆக, வெளிப்படையான விஷயம் என்னவென்றால் எனது வார்த்தைகள் காட்டிய அற்புதத்தோடு வேறு யாராலும் போட்டி போட இயலவில்லை. இந்த இல்ஹாமிற்குப் பிறகு 20க்கும் மேற்பட்ட நூல்களை நான் பொருட்செறிவும் சொற்செறிவும் மிகுந்த அரபியில் எழுதி வெளியிட்டேன். ஆனால் எவரும் அதற்கெதிரில் நிற்க முடியவில்லை. இறைவன் அவர்களிடமிருந்து உள்ளத்தையும், மொழியையும் பிடுங்கி என்னிடம் வழங்கினான்.

***இன்னொரு முன்னறிவிப்பு பற்றி கூறுகின்றார்கள்:***

பொருள்: இந்தத் தகுதி உமக்கு எங்கிருந்து கிடைத்தது. இது சூழ்ச்சியாகும். இறைவனைப் பார்க்காத வரை நாம் உம் மீது ஈமான் கொள்ள மாட்டோம். இவர்கள் மரணத்தின் அடையாளத்தை தவித வேறெந்த அடையாளத்தையும் நம்பமாட்டார்கள். அவர்களிடம் கூறுக: பிளேக் நோய் வருகிறது. என்னிடம் அவசரப்படாதீர்கள்.

***கூறினார்கள்:*** இது பிளேக் நோய் வருவதற்கு இருபது வருடங்களுக்கு முன் செய்யப்பட்டதாகும். இந்த நோய் பல வருடங்கள் இருந்தது. இலட்சக்கணக்கானோர் மரித்தனர்.

***பிறகு ஓர் முன்னறிவிப்பு பற்றி கூறுகின்றார்கள்:***

(பராஹீனே அஹ்மதிய்யா 242 –ல் பாருங்கள்) திண்ணைத் தோழர்கள் என்றால் என்னவென்று உமக்கு தெரியுமா? அவர்களின் கண்ணைப் பார்த்தீர் என்றால் அதில் கண்ணீர் வழிந்து கொண்டிருக்கும். உம் மீது தரூது அனுப்புவர். அவர்கள் கூறுவார்கள்: என் இறைவா! உன் பால் அழைப்பவரின் ஓர் அழைப்பைக் கேட்டோம். உங்கள் ஈமானை சரி செய்யுங்கள்; வலுப்படுத்துங்கள் என்று கூறினார். இறைவன் பக்கம் அழைத்தார். ஷிர்க்கிலிருந்து விலகினார்கள். நீர் பூமியில் வெளிச்சத்தைப் பரப்புகிற விளக்கு ஆவீர்.

எழுதிக் கொள்ளுங்கள். பராஹீனே அஹ்மதிய்யாவில் இந்த முன்னறிவிப்பு எழுதப்படும் போது திண்ணையுமில்லை. திண்ணைத் தோழர்களும் இருந்ததில்லை. இவை 1882 –ன் முன்னறிவிப்புகளாகும். அதன் இல்ஹாம்களாகும். பிறகு காதியானுக்கு ஹிஜ்ரத் செய்து வருபவர்களான தூயவர்களுக்காக திண்ணையும் உணவும் ஏற்பாடு செய்யப்பட்டது. பாருங்கள்! இது எவ்வளவு வல்லமைமிக்க முன்னறிவிப்புகள். இது கூறப்பட்ட சமயத்தில் ஒருவருக்கு இதன் பக்கம் சிந்தனை கூட வந்திருக்கவே முடியாது. ஒரு காலம் வரும். காதியானில் களங்கமற்றோர் வருவார்கள். அவர்களுக்காக திண்ணைகள் தயார் செய்ய வேண்டியது வரும் என்று நினைத்துப் பார்க்க முடியாது.

***பிறகு கூறுகின்றார்கள்:***

يُرِيدُونَ أَنْ يُطْفِئُوا نُورَ اللَّهِ بِأَفْوَاهِهِمْ ، وَاللَّهُ مُتِمُّ نُورِهِ وَلَوْ كَرِهَ الْكَافِرُونَ (பராஹீனே அஹ்மதிய்யா பக்கம் 246)

பொருள்: எதிரிகள் அல்லாஹ்வின் ஒளியை தமது வாயால் அணைக்க விரும்புவார்கள். அதாவது பல சூழ்ச்சிகளைப் பயன்படுத்துவார்கள். ஆனால் அல்லாஹ் தனது ஒளியை முழுமையாக்குவான். காஃபிர்கள் வெறுத்தபோதிலும் சரியே.

இது அக்காலத்தின் முன்னறிவிப்பாகும். அப்போது எந்த எதிர்ப்பும் இருந்ததில்லை. ஆனால் எதிரிகள் அழிந்து விடுவார்கள் என்று முன்னறிவிப்பு செய்யப்படுகிறது. ஆனால் இந்த முன்னறிவிப்பிற்கு பத்து ஆண்டுகளுக்குப் பிறகு எதிர்ப்பு எல்லையைத் தொட்டது. குஃப்ர் ஃபத்வாக்கள் தரப்பட்டன. வேகம் காட்டப்பட்டது. கொலை ஃபத்வாக்களும் எழுதப்பட்டன. நூற்றுக்கணக்கான நூல்களும் பத்திரிகைகளும் வெளியிடப்பட்டன. அநேகமாக எல்லா மவ்லவிகளும் எதிரிகளாயினர். என்னை அழிப்பதற்கு அவர்கள் மேற்கொள்ளாத இழிவான சின்னஞ்சிறிய திட்டமும் இருக்கவில்லை. ஆனால் விளைவு நேர் எதிராக இருந்தது. இயக்கமோ அசாதாரணமாக வளர்ச்சி அடைந்தது.

***பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்:***

பொருள்: மக்கள் உன்னை காப்பாற்றவில்லையென்றால், அழிப்பதற்கு முயற்சி செய்தால், இறைவன் தன் தரப்பிலிருந்து காரணிகளை உருவாக்கி உன்னைக் காப்பாற்றுவான். இறைவன் உன்னை நிச்சயம் காப்பாற்றி விடுவான். மக்கள் காப்பாற்ற விரும்பவில்லை என்றாலும் சரியே.

இது எத்தகைய வலிமையும் மகிமையும் கொண்ட முன்னறிவிப்பாக உள்ளது! காப்பாற்றப்படுவது பற்றி உறுதியான வாக்குறுதி அளிக்கப்படுகிறது. தெளிவாக வாக்களிக்கப்படுகிறது. மக்கள் உம்மை அழித்து விட முயற்சி செய்வார்கள். விதவிதமான திட்டங்களை யோசிப்பார்கள். ஆனால் உமது இறைவன் உம்முடன் இருப்பான். அவன் அவர்களின் சூழ்ச்சிகளை முறியடித்து உம்மைக் காப்பாற்றுவான்.

இப்போது சிந்தனை செய்யுங்கள். என்ன திட்டம் தான் இவர்கள் தீட்டவில்லை. என்னை அழிப்பதற்காக விதவிதமான சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. கொலை வழக்குகள் தொடரப்பட்டன. என்னை இழிவுபடுத்த பல ஜோடிப்புகள் செய்யப்பட்டன. டேக்ஸ் போட திட்டமிடப்பட்டது. குஃப்ர் ஃபத்வா எழுதப்பட்டது. கொலை ஃபத்வா எழுதப்பட்டது. ஆனால் இறைவன் அனைத்தையும் செயலிழக்கச் செய்தான். அவர்களின் எந்த தந்திரமும் வெற்றி பெறவில்லை. எந்த அளவுக்கு புயல் வீசியதோ அது குறித்து நீண்ட காலம் முன்னரே இறைவன் அறிவித்தான். இறைவனுக்குப் பயப்படுங்கள். உண்மை கூறுங்கள். மறைவான இடத்திலிருந்து இறை உதவி எனக்கு கிடைத்ததா? இல்லையா? காப்பாற்றுவதாக வாக்களித்திருந்தான். பொய் வழக்குகள் போடப்பட்டு, நீதிமன்றத்திற்கு அலைய விட்டு சிரமங்கள் தரப்பட்டது. ஏச்சுக்கள் வீசப்பட்டன. வழக்குகள் போட்டு அந்த செலவுகளால் நஷ்டம் விளைவிக்க முயற்சி செய்யப்பட்டது. காப்பாற்றப்படுதல் என்பதின் அசல் பொருளாவது, எதிரிகளின் பெரும் ஆபத்துகளிலிருந்து காப்பாற்றப்படுதல் ஆகும்.

பாருங்கள்! பாதுகாப்பு தருவது குறித்து நபி (ஸல்) அவர்களுக்கு வாக்குறுதி தரப்பட்டிருந்தது. ஆனால் நபி (ஸல்) அவர்களுக்கு உஹதுப் போரில் கடும் காயம் ஏற்படுத்தப்பட்டது. அந்த நிகழ்வு காப்பாற்றுவேன் என்ற வாக்குறுதி வந்த பிறகுதான் ஏற்பட்டது. அதுபோன்று இறைவன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு கூறினான். அந்த நேரத்தை நினைத்துப் பாருங்கள். இஸ்ராயீலின் சந்ததிகள் உம்மை கொலை செய்ய எண்ணியிருந்தார்கள். நான் அவர்களை தடுத்து விட்டேன். யஹூதிகள் மஸீஹை கைது செய்தார்கள். சிலுவையில் அறைந்து விட்டார்கள் என்பது பலமுறை நிரூபணமாகியுள்ளது. ஆனால் இறைவன் அவரது உயிரைக் காப்பாற்றினான். இதுவே இஸ்கஃபத்து உடைய பொருளாகும். இது வல்லாஹு யஃஸிமுக மினன்னாஸ் –ன் பொருளைப் போன்றதாகும்.

இந்த மூன்று நான்கு எடுத்துக்காட்டுகளை நான் வைத்துள்ளேன். அதுபோன்று அன்னாரின் நூல்களும் அடையாளங்களே ஆகும். அதுபற்றி அன்னார் கூறுகின்றார்கள்:

குறிப்பாக நான் இறைவனது அற்புதங்களை வல்லமைமிக்க ஆற்றல்களை சில நேரங்களில் பார்க்கின்றேன். அரபி அல்லது உருதுவில் ஒரு விஷயத்தை எழுதும் போது அது உள்ளத்திலிருந்து ஒருவர் கற்றுத் தருவது போன்று உணர்ந்துள்ளேன். எப்பொழுதும் எனது எழுத்துகள் அது அரபியாக இருந்தாலும், உருதுவாக இருந்தாலும், அது ஃபார்ஸியாக இருந்தாலும் அவை இரு பகுதிகளாக அடங்கியுள்ளன. ஒன்று, மிக எளிதாக அந்த வாக்கியத்தின் வாசகங்களும் அதன் பொருளும் என் முன் தோன்றுகின்றன. நான் அதனை எழுதிக் கொண்டே செல்கிறேன். எந்த வாக்கியத்தையும் எழுதுவதற்கு எனக்கு சிரமமே ஏற்படுவதில்லை. இவையெல்லாம் உண்மையில் எனது மூளையின் ஆற்றலால் நடக்கவில்லை. அதன் வாசகமும், பொருளும் இறைவனது உதவியால் அமைந்ததாக இல்லாதபட்சத்திலும் கூட அவனது சாதாரண உதவியின் பரக்கத்தால் கூட என்னால் எழுத முடியும். அதற்கு எனது இயல்பில் கடும் சிரமம் மேற்கொண்டும், நீண்ட காலம் எடுத்துக் கொண்டுமே செய்ய முடியும். அந்த கட்டுரைகளை என்னால் எழுத முடியும். அல்லாஹ் அஃலம்.

இரண்டாவது பகுதி, எனது எழுத்துக்களிலுள்ள அசாதாரண விஷயமாவது, நான் ஓர் அரபி வாசகம் எழுதும் போது ஒரு குறிப்பிட்ட சொல்லின் தேவை எனக்கு ஏற்படும் போது அது எனக்கு தெரியாத போது அது தொடர்பாக இறைவனது வழி எனக்கு வழிகாட்டுகிறது. அந்த வார்த்தை எனது உள்ளத்தில் வஹியாக ரூஹுல் குத்ஸ் போடுகிறது. நாவில் வருகிறது. அப்போது நான் அது குறித்து தெரியாதவனாகவே இருக்கிறேன். எனக்கு அரபி எழுதும் போது ஒரு வார்த்தை தேவைப்படும் போது அந்த சொல்லும் பொருளும் போடப்படுகிறது.

உதாரணமாக, குடும்பத்தின் காரணமாக கவலைப்படும் மனிதனின் நிலையைக் குறிக்கும் சொல் எனக்கு தேவைப்படும் போது அதே நேரத்தில் அந்த சொல் 'ஸஃபல்' என்று எனக்கு வஹியாக அருளப்படுகிறது. இதைப் போன்று நான் எழுதிக் கொண்டிருக்கும் போது கோபத்தாலும் கவலையாலும் அமைதியாகி விடுதல் என்பதற்கான அரபிச் சொல் எனக்கு தெரியவில்லை. உடனே என் உள்ளத்தில் வஹியாக அது ஹுஜும் என்று போடப்பட்டது. இதுவே அரபிச் சொற்களின் நிலையாகும். ஒழுங்கமைக்கப்பட்ட வாக்கிய அமைப்புடன் சொற்கள் உள்ளத்திலிருந்து வெளிப்படுகின்றன. அல்லது ஒரு மலக்கு எழுதப்பட்ட காகிதத்தை என் முன் காட்டுவது போன்றும் நடக்கிறது. சில சொற்றொடர்கள் குர்ஆன் வசனங்களாகவும் இருக்கின்றன. சில வேளை சற்று கவனம் செலுத்தும் போது சிலவேளை சற்று நேரம் கழித்து புரிய வருகிறது. சில சமயம் திருக்குர்ஆனின் வசனங்கள் அப்படியே அல்லது சில மாற்றங்களுடன் அருளப்படுகின்றன. அந்த குறிப்பிட்ட வசனம் வஹியாகவோ இல்கா (கருத்து உள்ளத்தில் இடப்படுதல்) –வாகவோ போடப்படுகிறது. அது இன்ன நூலிலுள்ள வாசகமாகும் என்று தெரிய வருகிறது. இறைவனே எல்லாவற்றிற்கும் உரிமையாளன் என்ற முறையில் எந்த நூலிலும் உள்ள மிகச்சிறந்த சொற்றொடரை அல்லது மிகச் சிறந்த கவிதையை அரபியில் விளக்கப்பட்ட ஒன்றை வஹியாக எனது உள்ளத்தில் இறக்க முடியும். இதில் வியப்பிற்குரிய விஷயம் எனக்கு சிறிதும் தெரியாத மொழியிலும் இறைவன் எனக்கு வஹியை இறக்கினான். ஆங்கிலம், சமஸ்கிருதம், ஹிப்ரு போன்ற மொழிகளில் இறக்கினான். பராஹீனே அஹ்மதிய்யாவில் சில எடுத்துக்காட்டுகளாக எழுதப்பட்டுள்ளன. எனது உயிர் எவனது கையில் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக இந்த இறை வழக்கமே என்னோடும் உள்ளது. அடையாளங்களுள் இந்த வகை அடையாளமும் எனக்கு தரப்பட்டுள்ளது. மறைவான விஷயங்கள் எனக்கு தரப்படுகின்றன. ஏதாவது அரபி, ஆங்கில, சமஸ்கிருத நூல்களிலுள்ள ஒரு சொற்றொடரை – எனக்காக மறைவானவற்றை வெளிப்படுத்திக் காட்டுவது ஒன்றைத் தவிர, இறைவன் எனக்கு வஹி ஆக தர வேண்டும் என்ற எந்தக் கவலையும் அவனுக்கு இல்லை.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தவ்ராத்தில் உள்ள பல விஷயங்களை எடுத்துக் கூறி அவற்றை மறைவான விஷயங்களில் சேர்த்துள்ளான். அந்தப் பகுதி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பொருத்தவரை மறைவான அறிவாக இருந்தன. யஹூதிகளுக்கு மறைவானவையாக இருந்ததில்லை. இதுவே அந்த இரகசியமாகும். நானும் எனது அரபி மொழியின் திறனுக்கு எதிரில் மக்களை அழைக்கிறேன். அதுவன்றி கர்வத்தினாலும் தற்பெருமையினாலும் உலகத்தை போட்டிக்கு அழைப்பதற்கு மனிதன் ஒரு பொருட்டே அல்ல. இதற்கு உதாரணங்கள் அரபி மக்களிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய அரபி நூற்களாகும். இக்காலத்திலும் அதற்கு முன்னுதாரணங்கள் உண்டு. அதனை எடுத்து வைக்கிறேன். சில அல்ல. நிறைய உண்டு. அவற்றில் சிலவற்றை எடுத்து வைக்கிறேன். அக்காலத்தில் அன்னாரது அரபி மொழி அறிவுக்கு முன் எவரும் வரவில்லை. இன்றும் அரபிகளிடம் அது எவ்வாறு வெளிப்படுகிறது என்று பார்க்கலாம்.

நமது பாலஸ்தீனிய பெண்மணி கூறுகிறார்: பாமர மக்களின் நம்பிக்கையின் படி எனது உறுதியான ஈமானாக இருந்தது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் இருக்கிறார்கள். இறுதிக்காலத்தில் வானிலிருந்து இறங்குவார். மற்ற சமுதாயங்களிடமிருந்து உம்மத்தை வாளின் மூலம் விடுவிப்பார். வாள் மூலமாக வலுக்கட்டாயமாக மக்களை மார்க்கத்தில் நுழையச் செய்வார். இந்த எண்ணத்தில் மிகவும் கடுமையாக அவரது வருகையை எதிர்பார்த்திருந்தேன். பிறகு எனக்கு எனது மைத்துனர் மூலமாக ஜமாஅத் அறிமுகமானது. ஜமாஅத் பற்றி என்னிடம் அதிகமாக பேசுவதோடு மட்டுமல்லாமல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய அரபி நூல்களையும் படைப்புகளையும் எனக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். அவற்றுள் எனக்க விலை மதிக்க முடியாத பல முத்துக்கள் கிடைத்தன. அந்த அளவுக்கு இறை ஞானத்தை எனது வாழ்வில் நான் எப்போதும் பெறவில்லை. அத்தகைய கருத்தாழமிக்க அற்புத அரபி மொழி நடையின் மணிகளை உள்ளடக்கியிருந்தன. என்னைப் பொருத்தவரையில் அது முற்றிலும் புதிதாக இருந்தது. அதனை ஒருவர் கருத்தூன்றி படிப்பதன் மூலம் ஒருவருக்கு இறைவனோடு தொடர்பு ஏற்படத் தொடங்கி விடுகிறது. மிகவும் திருப்தி அடைந்த நிலையில் நான் பைஅத் செய்து விட்டேன்.

***பிறகு அல்ஜீரியாவிலிருந்து ஹிஜாஸ் சாஹிப் கூறுகிறார்:***

மாற்றப்பட்ட இஸ்லாத்தின் போதனைகள் மற்றும் திருக்குர்ஆனின் தவறான விளக்கவுரைகளால் நான் முற்றிலும் அவநம்பிக்கை கொண்டிருந்தேன். உலமாக்களின் விரிவுரைகளைக் கேட்டு, இது இறைவனுடைய வார்த்தையாக இருக்க முடியுமா? என்று நினைத்ததுண்டு. இந்த சூழ்நிலையில் ஜோர்டான் உடைய ஒரு நண்பர் மூலம் அஹ்மதிய்யா இயக்க நிறுவனரின் நூல்கள் படிக்கக் கிடைத்தன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தஃப்ஸீர் படிக்கும் முன் நஃபில் தொழுது துஆ செய்தேன். அல்லாஹ் நேர்வழி காட்ட வேண்டும் என்று கேட்டேன். படிக்கப் படிக்க உள்ளம் திறந்தது. இது ஒரு மனிதனது வார்த்தையே இல்லை. மாறாக இறைவனது வஹி என்ற உறுதி ஏற்பட்டது.

***பிறகு அபுதாபியிலிருந்து ஃபராஸ் சாஹிப் கூறுகிறார்:***

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய எவ்வளவு புத்தகங்கள் கிடைத்ததோ அவை அனைத்தையும் படித்ததில் இருந்தும், M.T.A. –வின் நிகழ்ச்சிகளான அல் ஹிவாருல் முபாஷிர் பார்த்ததாலும் எனக்கு ஜமாஅத்தின் கோட்பாடுகள் தெரிய வந்தது. ஆரம்பத்தில் எனது அறியாமை மற்றும் முந்தைய கோட்பாடுகளின் காரணமாக எதிர்ப்பு காட்டினேன். ஆனால் குர்ஆனிய வசனம், ஹதீஸ் சுன்னத்துகளைக் கவனமாக ஆய்வு செய்த போது எனது உள்ளம் நிம்மதி அடைந்தது. எனது முன் இரு வழிகள் ஏற்பட்டன. ஒன்று, ஹஸ்ரத் ஈஸா பின் மர்யமை வானத்திலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருப்பது. அதற்கு முன் தஜ்ஜாலின் வருகையை எதிர்பார்த்திருத்தல். இறைவனுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய பண்புகளும் அவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இறந்தவரை உயிர் கொடுத்தல் போன்றவையாகும். ஜின்கள் கதைகள், பிறகு நாஸிக் மன்சூக் கொள்கைகளைத் தொடர்ந்து நம்புதல் அல்லது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மஹ்தி என்று ஏற்றுக் கொள்வது. அவர்கள் இஸ்லாத்தை வீணானவற்றிலிருந்து தூய்மைப்படுத்தினார்கள். இஸ்லாத்தின் அழகான முகத்தை எடுத்துக் காட்டினார்கள். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களையும் தற்காப்பு செய்தார்கள்.

கூறுகிறார்: எவ்வாறிருப்பினும் இறைவனிடம் உதவி தேடினேன். உண்மையின் வழியின் நடக்க வேண்டும் என்று மிகவும் துஆ செய்தேன். பிறகு ஜமாஅத்தே அஹ்மதிய்யா மற்றும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் பக்கம் உள்ளம் ஈர்க்கப்படுவதை உணர்ந்தேன். கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதிய கவிதைகளைக் கேட்டேன். என் உள்ளம் இறங்கியது. கண்களில் கண்ணீர் பெருகியது. இந்த கவிதையை ஒரு இட்டுக்கட்டுபவர் கூறவே முடியாது. ஓர் இட்டுக்கட்டுபவரின் உள்ளத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இத்தனை அன்பு எப்படி ஏற்பட முடியும்? மேலும் ஓர் அரபி அல்லாதவருக்கு இத்தனை கருத்தாழமிக்க சொற்செறிவு மிக்க அரபியைப் பயன்படுத்துவது இறைவனது உதவி இல்லாமல் நடைபெறுவது சாத்தியமில்லை.

***பிறகு அரபு நாட்டைச் சேர்ந்த இத்தாலியில் வசிக்கும் அப்பாஸ் சாஹிப் கூறுகிறார்:***

மவ்லவிமார்களின் விமர்சனங்கள் ஒருபுறம் இருந்தாலும் நான் M.T.A –வில் அல் அரேபியா பார்க்கத் தொடங்கினேன். அதில் அல்ஹிவார்... பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் நிகழ்ச்சியின் இடையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது அரபி கஸிதா வந்தது. நான் இந்தக் கவிதையுடன் சேர்த்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்து நிழற்படத்தையும் பார்த்துக் கொண்டிருந்தேன். உடனே என்னையும் அறியாமல் எனது நாவிலிருந்து இந்த வார்த்தை வந்தது. இறைவன் மீது ஆணை! இந்த வார்த்தையை ஒரு பொய்யர் ஒருபோதும் கூறியிருக்கவே முடியாது. இம்மனிதர் நிச்சயமாக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவராவார். அத்தகைய வார்த்தையைக் கூறியவர் இறைவனுக்கும் அவனது ரஸூலுக்கும் அவமரியாதை செய்பவராக ஒருபோதும் இருக்க முடியாது.

***பிறகு மொரோக்கோவின் காலித் சாஹிப் கூறுகிறார்:***

அஹ்மதிய்யத் அறிமுகமான பிறகு எனக்கு ஒரு விஷயத்தில் பெரும் ஆச்சரியம் ஏற்பட்டது. இமாம் மஹ்தி வந்து சென்றும் விட்டார். நாம் அவரைப் பற்றி கேள்விப்படவும் செய்கிறோம். நான் மிகவும் யோசித்து இறைவனிடம் வழிகாட்டலைத் தருமாறு துஆ செய்தேன். ஜமாஅத்தின் அரபி இணையதளத்திலுள்ள நூல்களை வாசிக்கத் தொடங்கினேன். நான் முதலில் படித்தது. இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்று நூலின் அரபி மொழியாக்கம் தான். அதனை பலமுறை படித்தேன். அதில், அத்ல், இஹ்ஸான், ஈதாயிதில் குர்பா ஆகியவற்றின் விளக்கம் படித்து, எனது ரூஹும் உருகியது. நான் அத்தப்லீக் என்ற நூலும் பிற நூல்களும் படித்தேன். இந்த புத்தகங்கள் ஆன்மீக நுட்பங்கள் மற்றும் மார்க்க ஞானங்கள் எந்த அளவு எனது நாவிலிருந்து பெருக்கெடுத்து வந்து கொண்டிருந்தது என்றால் அடிக்கடி ஒரு கருவூலம் கிடைத்து விட்டது என்று கூறியது.

***மர்தா சாஹிபைப் பற்றி நமது ஹானி தாஹின் சாஹிப் எழுதுகிறார்:***

நமது இணையதளத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மர்யம் ஆவது, பிறகு மரியமின் ரூஹ் ஊதப்படுவது பற்றி கேட்டவுடன் அவருடன் தொடர்பு கொள்ளப்பட்டது. அவருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மேற்கோள்களும், சில கட்டுரைகளும் அனுப்பப்பட்டன. அதனால் பெரிதும் கவரப்பட்டார். உண்மையைப் புரிந்து விட்டார்.

அவர் எழுதுகிறார்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூலாகிய அத்தப்லீக் எனது உள்ளத்தைத் திறந்தது. எனக்கும் மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. இக்காலத்திலும் கூட நபிமார்களின் ஒளி பொருந்திய நூலைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது என்று மகிழ்ச்சி ஏற்பட்டது. எனது ஐயங்களுக்காக வேதனையும் எழுந்தது.

***எமனைச் சேர்ந்த ஒருவரை குறித்து அத்தானி சாஹிப் கூறுகிறார்:***

அவர் ஒரு பத்திரிகையாளராக இருந்த காரணத்தால் உண்மையை அறியும் ஆர்வம் இருந்தது. எனவே ஜமாஅத்தின் எதிரிகளின் நூலையும் படித்தார். அதில் நாருவாலின் ஓர் ஆட்சேபனையாளரின் எழுத்தைப் படித்து விட்டு குஃப்ர் வரை செல்லும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டது. மீண்டும் ஆய்வு செய்து ஒரு நிலையை அடைந்தேன். இவை குர்ஆனைப் பற்றிய தவறான ஆட்சேபனைகளைப் போன்றவையே தவிர வேறல்ல. இன்னொரு பக்கம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அரபி ஞானம் போன்றவை அற்புதங்களாகும். மேலும் அன்னார் பாரசீக வம்சத்தில் பிறந்ததும் ஒரு இறை அற்புதமாகும். அரபியிலிருந்து தான் மஹ்தி வர வேண்டும் என்ற அவசியமுமில்லை. மேலும் ஹிதாயத் மற்றும் நுபுவ்வத் அரபிகளை மட்டும் சார்ந்ததில்லை. மற்ற உலகத்தின் தவறு என்ன? இஸ்லாத்தின் கடைசிக் காலம் நெருங்குகிறது என்பதற்கு என்னைப் பொருத்தவரையில் இஸ்லாத்தின் இரண்டாவது பரவுதல், அரபி அல்லாதவரிடமிருந்து ஆரம்பமாகும் என்பதும் ஒரு பொருளாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களைப் படித்த பிறகு அன்னரே இஸ்லாத்தின் சரியான உருவத்தை உலகிற்கு அளித்துள்ளார்கள். அதனை மக்கள் மறந்து விட்டிருந்தார்கள். மாற்றியிருந்தார்கள். இஸ்லாம் என்பது அமைதி சாந்தி என்பதாகும். முஸ்லிம்களோ ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றனர். இரத்தம் சிந்தும் மஹ்தியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதாவது குகையில் இருந்து வர வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே உண்மையான மஹ்தியை ஏற்றுக் கொண்டு அவரைப் பின்பற்றுகிறது.

***பிறகு ஈரானிலிருந்து ஹயாத் சாஹிப் கூறுகிறார்:***

எனது பிறப்பும் வளர்ப்பும் ஷியா குடும்பத்தில் நிகழ்ந்தது. எனக்கு ஆரம்பத்திலிருந்தே மார்க்கத்தின் மீது கவனம் இருந்தது. பல்வேறு டி.வி. நிகழ்ச்சிகளைப் பார்த்தேன். பல நூற்களும் படித்தேன். இஸ்லாம் எடுத்து வைக்கப்படும் விதம் எனக்கு ஆறுதலாக இல்லை. எந்த முறையில் இஸ்லாத்தை எடுத்து வைக்கிறார்களோ அதில் நிச்சயமாக ஏதோ குறைவு அல்லது பலவீனம் உள்ளது. ஏனெனில் திருக்குர்ஆன் கூறுகிறது. மக்கள் அதிகமாக இந்த மார்க்கத்தில் நுழைவர். ஆனால் தற்போதைய மக்கள் இஸ்லாத்தின் உண்மை நிலையை அறியாமல் இருக்கிறார்கள். பிறகு எனக்கு உறுதி ஏற்பட்டது. இஸ்லாத்தைப் பற்றிய தூதுச் செய்திகளைப் பற்றி இப்போதுள்ள புரிதலை முதலில் சரிசெய்ய வேண்டும்.

கூறுகிறார்: ஒருநாள் என் நண்பர் வீட்டிற்கு அழைத்தார். M.T.A–வை அறிமுகம் செய்தார். அதற்குப் பிறகு நான் ஹிவாருல் முபாஷிர் மற்றும் சில நிகழ்ச்சிகளைப் பார்த்தேன். அவற்றில் உங்களது திருக்குர்ஆன் தஃப்ஸீர் பல்வேறு சட்டப் பிரச்சனைகளில் ஆழிய கருத்தாழமிக்க உரையாடல்கள் என்னைக் கவர்ந்தன. முதன் முறையாக ஓர் இஸ்லாமிய சேனலில் இஸ்லாம் பற்றிய அறிவுப்பூர்வமான உரையாடல்கள், தொடர்பு கொண்டு கேள்வி கேட்பவர்களுக்கு, ஆதாரப்பூர்வமான பதில் அளிப்பதைக் கேட்டேன். கூறுகிறார்: ஆச்சர்யம் என்னவென்றால் இந்த உலமாக்கள் அதாவது அஹ்மதியல்லாத உலமாக்கள் ஷியாக்களை வாதத்திற்கு அழைக்கின்றனர். அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக வெறும் காஃபிர் ஃபத்வாக்கள், ஏச்சுப் பேச்சுக்களையே போதுமானதாக்கிக் கொள்கின்றனர். ஏனெனில் ஜமாஅத் அஹ்மதிய்யாவுடன் ஆதாரங்களுடன் போட்டியிட முடியாது.

***கூறுகிறார்கள்:*** அஹ்மதிகளைக் கைதும் கொலையும் செய்யப்படுகிறது. அதன் மூலம் உறுதி ஏற்பட்டு விட்டது. ஜமாஅத்தின் எதிரிகளிடம் இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வேலைகள் செய்வதைத் தவிர வேறெதுவும் இல்லை. நான் M.T.A பார்க்கும் போதெல்லாம் எனது ஈமான் உறுதியாகிக் கொண்டே செல்கிறது.

திருக்குர்ஆனில் எந்த மாற்றும் வசனங்களும் இல்லை என்ற உங்களது கொள்கையை அறிந்து இஸ்லாத்துடன் உங்கள் அன்பு எனக்கு உறுதியாகி விட்டது. மஸீஹ் மவ்வூது இஸ்லாத்திற்கு மற்ற மார்க்கங்களின்

மீதுள்ள மேன்மையை நிரூபிக்கவும் செய்துள்ளார் என்றும் இஸ்லாத்தின் மீது எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளுக்குப் பதில் எழுத பராஹீனே அஹ்மதிய்யா எழுதியுள்ளார்கள் என்றும் கேள்விப்பட்டு தப்லீகின் மீது அவர்களது பிடிப்பு பற்றி உறுதி ஏற்பட்டது. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் கலீஃபாக்களின் நூல்களைப் படித்து உறுதி ஏற்பட்டது. இவர் சாதாரண மனிதரல்ல. இவர் இஸ்லாத்தின் நலம் விரும்பியாவார். இவரே உலகிற்குத் தேவை என்றும் உணர்ந்தேன். மேலும் ஹுஸூர் (அலை) அவர்களுடைய அரபிப் புலமை, அரபிகளிடம் ஓர் அரபி அல்லாதவர் சவால் விடுவது. இது எதிரிகளுக்கு ஒரு பொன்னான வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாகும். அவர்கள் தமது மேன்மையை நிரூபித்திருக்கலாம். ஆனால் அவர்களால் முடியவில்லை. இந்த ஆதாரங்களெல்லாம் என்னிடம் கிடைத்தும் அன்னார் மீது ஈமான் கொள்ளாமல் இருக்க வழி இல்லாமல் ஆகி விட்டது. இதனைத் தெரிந்து கொண்ட பிறகு தப்லீக் செய்வதைக் கடமை என்று கருதுகிறேன். இவ்வாறு எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன. நான் சிலவற்றையே எடுத்து வைத்துள்ளேன்.

***அடையாளங்கள் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:***

எனது கையில் நூற்றுக்கணக்கான அடையாளங்கள் வெளிப்பட்ட மனிதனாக உள்ளேன். இந்த பூமியில் இந்த அடையாளங்கள் விஷயத்தில் என்னோடு போட்டிபோட்டு ஜெயிக்க எவராவது உள்ளாரா? எனது உயிர் எவன் கையில் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணை! இதுவரை எனது கையினால் இரண்டு இலட்சம் வரை அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளன. சுமார் பத்தாயிரம் பேர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கனவில் கண்டுள்ளனர். அன்னார் என்னை உண்மைப்படுத்தியுள்ளார்கள். இந்த நாட்டிலுள்ள பேர்பெற்ற சில கஷ்ஃபுகள் உடைய பெரியார்கள் அவர்களிடம் மூன்று நான்கு இலட்சம் முரீதுகள் இருந்தார்கள். அத்தகைய பெரியார்களுக்கு கனவில் காட்டப்பட்டது. இம்மனிதன் இறைவன் புறமிருந்து வந்தவர். அவர்களுள் சிலர் எனக்கு முன்பு முப்பது வருடங்களுக்கு முன் உலகை விட்டுச் சென்று விட்டனர். அவர்களுள் ஒரு பெரியவர் லூதியானா மாவட்டத்தைச் சேர்ந்த குலாப் ஷா. இவர் ஜமால் பூரைச் சேர்ந்த மியான் கரீம்பக்ஷ் மர்ஹூமுக்கு தெரிவித்திருந்தார். ஹஸ்ரத் ஈஸா காதியானில் பிறந்து விட்டார். லூதியானாவுக்கு வருவார். மியான் கரீம் பக்ஷ் சாஹிப் ஸாலிஹான நல்ல விசுவாசமிக்க வயோதிக மனிதர். அவர் என்னை லூதியானாவில் சந்தித்தார். எல்லா முன்னறிவிப்புகளையும் என்னிடம் சொன்னார். அதற்காக மவ்லவிகள் அவருக்கு மிகவும் தொல்லை தந்தனர். அவற்றை அவர் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

அவர் என்னிடம் கூறினார்: குலாப்ஷா என்னிடம் கூறினார். ஈஸா பின் மர்யம் (மர்யமின் மகன்) உயிருடன் இல்லை. அவர் உலகிற்கு திரும்பி வரமாட்டார். இந்த உம்மத்திற்காக மிர்ஸா குலாம் அஹ்மது ஈஸா ஆவார். இறைவல்லமை முதலிலேயே அவரை ஈஸாவுக்கு ஒப்பாக ஆக்கியது. வானத்தில் அவர் பெயர் ஈஸா என்று வைக்கப்பட்டது. மேலும் அவர் கூறினார்: கரீம் பக்ஷ் சாஹிபே! ஈஸா வெளிப்பட்டால் இந்த மவ்லவி எந்த அளவு எதிர்ப்பார்கள் என்று நீர் பார்ப்பீர். கடுமையாக எதிர்ப்பார்கள். ஆனால் தோற்ற விடுவர். திருக்குர்ஆன் மீது எழுதப்பட்ட பொய்யான அடிக்குறிப்புகளை அகற்றி திருக்குர்ஆனில் அசல் முகத்தை உலகிற்குக் காட்டவே அவர் தோன்றுவார். இந்த முன்னறிவிப்பில் அவர் தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளார். அதாவது ஈஸாவைக் காணும் அளவு நீர் வயதைப் பெறுவீர். இப்போது நாம் பார்க்கிறோம். கனவின் மூலமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சிலருக்கு வழிகாட்டியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் பைஅத் செய்தவர்களின் சில சம்பவங்களையும் அதற்குப் பிறகு வாழ்ந்த சிலரது சம்பவங்களையும் கூறுகிறேன்.

***ஹஸ்ரத் மியான் அப்துர் ரஷீத் சாஹிப் கூறுகிறார்:***

எனக்கும் எனது தந்தைக்கும் பைஅத் செய்யும் தூண்டுதல் கனவின் மூலமாக நடந்தது. நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் கனவில் பார்த்தேன். ஹுஸூர் ஒரு கட்டிலில் படுத்திருந்தார்கள். மிகவும் நோயுற்றிருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நோயாளியைக் கவனித்துக் கொள்பவர் போன்று அருகில் நிற்கிறார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் அன்னாரின் தோளைப் பற்றி எழுந்து நிற்கிறார்கள். இந்நிலையில் ஹுஸூர் (ஸல்) அவர்கள் சொற்பொழிவாற்றத் தொடங்குகிறார்கள். அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைகள் பற்றிய சொற்பொழிவாக இருந்தது. அதன் பிறகு கனவில் பார்க்கிறேன். ஹுஸூர் (ஸல்) அவர்கள் நலம் பெற்று விட்டார்கள். அவர்களின் முகம் பொலிவு பெற்று விட்டது. இந்த கனவிலிருந்து நான் எடுத்த விளக்கமாவது, இப்போது இஸ்லாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக மீண்டும் உயிர் பெறும். இந்தக் கனவுக்குப் பிறகு நான் பைஅத் செய்து விட்டேன்.

***அதுபோன்று அப்துல்லாஹ் சாஹிபின் மகன் ஜனாப் அப்துஸ் ஸத்தார் சாஹிப் எழுதுகின்றார்:***

நான் எனது தந்தையிடம் கேட்டேன். ஹஸ்ரத் மஸீஹ் நாஸிரி உடைய மரணம் குறித்த விவகாரம் தெரியவில்லை. உயிருடன் இருக்கின்ற விவகாரம் தான் தெரிகிறது. அவர் உயிரோடு இருப்பதைப் பற்றி கேட்டு வருகிறேன். எனக்கு புரிய வையுங்கள். எனது தந்தையார் பைஅத்திற்கு 8–10 மாதங்களுக்கு முந்தைய தனது கனவைக் கூறினார். ராவி நதிக்குப் பக்கத்தில் நான் பார்க்கிறேன். அங்கு இரு கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடையது. மற்றொன்று, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடையது. நான் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களுடைய கூடாரத்தில் நுழைந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது என்று வாதம் செய்கின்ற பெரியவர் எத்தகையவர் என்று அங்கு நான் கேட்கிறேன். அன்னார் கூறினார்கள்: அம்மனிதர் மிகவும் தகுதியானவர்; மிகவும் தகுதியானவர்; மிகவும் தகுதியானவர். மூன்று முறை விரலால் சைகை செய்து கூறினார்கள். முழுமையான சாட்சியத்திற்குப் பிறகு நிச்சய உறுதி ஏற்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது வாதத்தில் நேர்மையானவர். உயிருள்ளவர் மரணித்தவர் பற்றி பிரச்சனை வேண்டாம் என்று நான் பைஅத்தில் என்னை இணைத்து விட்டேன்.

***சர்தார் கரம் தாத் சாஹிப் அறிவிக்கிறார்கள்:***

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்வதற்கு முன் கனவில் கண்டேன். ஒரு பாதை உள்ளது. அதில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இருவரும் நிற்கிறார்கள். இந்த அடியான் அவர்களுக்கு எதிரில் இருந்து வந்து கொண்டிருக்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சுட்டிக்காட்டி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த அடியாரிடம் கூறுகிறார்கள். இவர் இறைவன் புறமிருந்து வந்துள்ளார். இவர் இறைவன் புறமிருந்து வந்துள்ளார் என்று மூன்று முறை கூறுகிறார்கள். விரலால் சுட்டிக்காட்டுகிறார்கள்.

நான் 1902 –ல் காதியான் தாருல் அமானுக்கு சென்ற போது சிறிய பள்ளிவாசலில் வைத்து பைஅத் செய்த போது, கனவில் கண்ட அதே உருவத்திலேயே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் கண்டேன். இக்காலத்திலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலின் காட்சியைப் பார்க்கிறோம்.

***ஜெர்மனியில் வசிக்கும் முஹம்மது பின் அஹ்மது சாஹிப் கூறுகிறார்:***

நான் சிறிது காலமாக இதனை எழுத வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால் மீண்டும் மீண்டும் எழுத முடியாமல் போனது. ஏனென்றால் எதுவரை இறைவனது சிறப்பான அனுபவத்தை நான் உணர்ந்திருக்காவிட்டால் இதனை எழுத உட்கார்ந்திருக்க மாட்டேன். அப்போது நான் ஜெர்மனியில் படித்துக் கொண்டிருந்தேன். குழந்தைப் பருவத்தையும் வாலிபப் பருவத்தையும் சவூதி அரேபியாவில் கழித்திருந்தேன். அங்கு அஹ்மதிய்யத்தின் பெயரைக் கூட கேட்டதில்லை.

2004 அல்லது 2005 –ல் கனவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தரிசனம் கிடைத்தது. அப்போது நாங்கள் ஓர் அழகிய மினாராவில் நிற்கிறோம். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் விரலால் சந்திரனை சுட்டிக்காட்டுகிறார்கள். அது முழு நிலவாக மிகவும் அருகில் இருந்தது. சந்திரனின் ஒளி எங்களது நாலாபுறமும் தொலைதூரம் வரை பரவியிருந்தது. அதற்கு நடுவில் ஒரு மினாரா இருந்தது. நபி கரீம் (ஸல்) அவர்கள் ஏதோ ஒன்றைச் சுட்டிக்காட்டி என்னிடம் கூறுகிறார்கள். அதனை நான் முன்னாளில் அறிந்திருக்கவில்லை. என்னுடன் மிகவும் அன்போடு பேசுகிறார்கள். அதனை விளங்குவது சாத்தியமில்லாததாகும். ஹுஸூர் (ஸல்) அவர்கள் சென்று விட்டார்கள். அப்போது அவர்களது முகத்தில் உலக மக்களுக்கான வேதனை தென்பட்டது.

பிறகு நான் விழித்து விட்டேன். நான் பூமியை விட்டும் உயரத்தில் இருப்பதாக உணர்ந்தேன். அதற்குப் பிறகு நீண்ட நாள் வரை மக்களுடன் எனது ஸலாம், பேச்சுகள் குறைந்தன. இந்த கனவு எனக்குப் புரியவில்லை. எந்த அளவுக்கு எனில், எனது தந்தை அதற்குப் பிறகு கூறியதைக் கேட்டு என் வியப்பிற்கு எல்லையே இல்லை. எனது தந்தை கூறினார்: அவருக்கும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தரிசனம் கிடைத்திருந்தது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் 1979 –ல் எனது பிறப்பு பற்றி தந்தையாருக்கு நற்செய்தி கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எனது தந்தையின் கனவில் கூறியிருந்தார்கள். உனக்கு ஒரு மகன் பிறப்பான். அவன் பெயர் முஹம்மது என்று வையுங்கள். இதனை எனது தந்தையார் 2007 –ல் கூறினார். அதுவரை நான் அஹ்மதிய்யத் பற்றி எதுவும் அறிந்திருக்கவில்லை. சிரியாவில் வைத்து எனது தம்பி ஜமாஅத் இணையதளம் பற்றி கூறினார். உடனே நான் ஜமாஅத்தின் கொள்கைகள் தஃப்ஸீர்களைப் படித்தேன். ஏறக்குறைய அது நான் சிறு வயதில் எனது நண்பர்களுடன் உரையாடிய விஷயங்களாக இருந்தன. அதாவது தஜ்ஜால் என்பதன் பொருள் இக்கால மேற்கத்திய நாடுகளின் வியாபாரப் புரட்சி, உலகாதாய ஆர்வம், கிறித்தவப் பிரச்சாரம் செய்யும் சக்திகள் ஆகும்.

அவர் எழுதுகிறார்: நிச்சயமாக என்னை நம்புங்கள். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இறை ஞானம் பொருந்திய நூல்களைப் படித்து விட்டு அழுது கொண்டே இருந்தேன். அதன் சொற்கள் எனது ரூஹில் இறங்கின. இது ஈமானின் எத்தகைய செல்வம் என்றால் அதனை விளக்குவது சாத்தியமில்லை. ஜமாஅத்தின் கொள்கைகளைப் பிறர் மீது மிகைத்திருப்பதும் தெளிவாக இருந்தது. நிச்சயமாக ஜமாஅத் இஸ்லாத்தின் சரியான கொள்கையை எடுத்து வைக்கிறது. உதாரணமாக, திருக்குர்ஆன் மாற்றிய வசனம் மாற்றப்பட்ட வசனங்களில் இருந்து தூய்மையாக இருப்பது அறிவுப்பூர்வ தர்க்கரீதியான விரிவுரைகள், நபிமார்களின் கண்ணியம் இஸ்ரா மிஃராஜின் உண்மை நிலை ஆகிய விஷயங்கள் மஸீஹ் மவ்வூதின் ஜமாஅத்தில் மட்டும் தான் உள்ளது. இப்போது அவற்றிற்கு ஒரு பகுதி வெற்றி கிடைத்துள்ளது. அதிவிரைவில் முழுமையான வெற்றி கிடைக்கும் இன்ஷா அல்லாஹ்.

***டமாஸ்கஸிலிருந்து நண்பர் ரிஸ்வான் சாஹிப் கூறுகிறார்:***

டமாஸ்கஸ் பல்கலைக் கழகத்தில் நாம் கணிதம் படித்த பிறகு ஐ.டி. படித்து முடித்தேன். பிறகு கம்பியூட்டர் பணி செய்தேன். அத்துடன் டமாஸ்கஸில் சில பள்ளிகளில் இளைஞர்களுக்கு திருக்குர்ஆன் கற்றுத் தந்தேன். மார்க்கக் கல்வியை எந்த நிறுவனத்திலும் சென்று கற்கவில்லை. எனினும் சுய முயற்சியாலும் படித்ததாலும் புரிந்து கொண்டேன். ஒரு சம்பவத்திற்குப் பிறகு இறைஞானம் பெறுவதற்கான முயற்சியில் இறங்கினேன். அதற்குப் பிறகு நான் பார்த்த முதல் கனவு என்னைப் பொருத்தவரையில் ஒரு தூதுச் செய்தியாகும். திருக்குர்ஆனே அறிவுகளின் கருவூலமாகும். தமது வாழ்விலுள்ள எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வை அதில் தேடுங்கள். நான் திருக்குர்ஆனில் ஆய்வு செய்தேன். அதன் அருள்கள் மற்றும் ஞானத்தால் என்னுடைய மடி நிறைந்தது. ஓரிரவு தொழுகையில் இறைவார்த்தையை ஓதி விட்டு மிகவும் பயந்தேன். இறைவனிடம் நேர்வழி பெற வேண்டும் என்று நினைத்தேன். அப்போது இரு இளைஞர்கள் கதவைத் தட்டினர். காதியானிய்யத் பற்றி கேட்டனர். நான் காதியானியத் காஃபிர்கள் என்று எழுதப்பட்ட ஒரு புத்தகத்தை எடுத்து அவர்களிடம் வாசித்தேன். அப்போது திடீரென்று எனக்கு ஓர் உணர்வு ஏற்பட்டது. நான் புத்தகத்தை மூடி விட்டேன். நான் பெரும் தவறு செய்வதாகப் பட்டது. ஏனெனில் நான் ஒருபோதும் பேசுவதற்குக் கூட சந்தர்ப்பத்தைப் பெறாத ஒரு ஜமாஅத்தைப் பற்றி இப்படி பேசுகிறோமே, அங்கிங்கு கேள்விப்பட்டதை வைத்து பேசுகிறேனே என்ற எண்ணம் ஏற்பட்டது. பிறகு கண்ணியத்திற்குரிய பத்ர் சாஹிபுடன் அறிமுகம் ஏற்பட்டது. அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற நூலைத் தந்தார். அதனை முழுமையாகப் படித்து முடிக்காமல் கீழே வைக்கவில்லை. அந்த மனிதனின் ஒவ்வோர் அவையிலும் இஸ்லாம் நிரம்பியுள்ளது என்று உணர்ந்தேன். இவர் இஸ்லாத்தைப் பற்றி கேள்விப்பட்டதைக் கூறவில்லை. அனுபவித்துக் கூறுகிறார். இவர் நிச்சயமாக இறைவனது நெருக்கம் பெற்றவராகவே இருக்க வேண்டும். வஹி இலாஹி நின்று போகாது என்ற கருத்து என்னை மிக அதிகமாக ஈர்த்தது. ஆறு மாதத்திற்கு முன்பு நான் ஒரு கனவு பார்த்திருந்தேன். அல்லாஹ்வின் முன் நான் நிற்கிறேன். அல்லாஹ்வின் ஒளி பரவியுள்ளது. இறைவன் என்னிடம் கூறுகிறான். நான் உனது பாதுகாப்பிற்காக கவசத்தை வழங்கியுள்ளேன். எனக்கு அது புரியவில்லை. மாறாக கேட்டேன்; கட்டுப்பட்டேன் என்று கூறினேன். உடனே ஒரு மலக்கு தென்பட்டார். அவர் போர் வீரர் போன்று இருந்தார். ஆயுதம் ஏந்தியிருந்தார். அவர் கூறினார்: உமது நண்பர் பாஸித்திடம் கூறுங்கள். லாயிலாஹ இல்லல்லாஹ்வுடன் இணைந்திருங்கள். இதற்குப் பிறகு நான் ஹுஸூர் (அலை) அவர்களுடைய எல்லா அரபி நூல்களையும் படித்தேன். பயன்பெற்றேன். அவர்களின் வார்த்தைகள் என்னை வசியம் செய்தன. பிறகு நான் இஸ்திகாரா செய்தேன். ஒருமுறை எனக்கு இந்த வசனம் கேட்டது. மீண்டும் ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தரிசனம் கிடைத்தது. நான் கேட்டதற்கு கூறினார்கள். இக்காலத்தின் குழப்பத்திலிருந்து தப்பிப்பதற்கு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களே ஈடேற்றத்தின் கப்பலாவார்கள்.

பிறகு சில அடையாளங்களைப் பார்த்து ஆப்பிரிக்காவைச் சேர்ந்த பல்வேறு நபர்கள் எழுதியுள்ளனர். ***நமது முபல்லிக் எழுதுகிறார்:***

அப்துல் மாலிக் தமது இரு நண்பர்களிடம் முன்ஷி என்ற பெயருடைய ஊருக்கு தப்லீகிற்காக சென்றனர். அங்குள்ள மக்கள், இளைஞர்கள், தப்லீகின் போது கூச்சலிட்டனர். தப்லீகை நிறுத்த வேண்டியதாயிற்று. மறுநாள் அநத் கிராமத்தின் மக்கள் தங்களுடைய நிகழ்ச்சிக்காக திரண்டிருந்த போது திடீரென வேகமான காற்று வீசியது. மழைக்கான அறிகுறியே இல்லா இடத்தில் மேகம் சூழ்ந்தது. வேகமாக புயற்காற்று வீசியது. கடும் மழை பெய்தது. அவர்களது எல்லா நிகழ்ச்சிகளும் வீணாகி விட்டது. இதனால் அவ்வூர் மக்கள் இது இறைவனது கோபத்தின் அடையாளம் என்று உணர்ந்தனர். அஹ்மதிகளின் தப்லீகை தடுத்ததன் விளைவாக வெளிப்பட்டுள்ளது. இதன் விளைவாக 41 பேர் அஹ்மதிய்யத்தில் இணைந்தனர்.

பிறகு நைஜீரியாவின் ரிப்போர்ட்டில், அங்கு துலுகாம் மற்றும் அதனைச் சுற்றி தப்லீக் செய்து கொண்டிருந்தனர். எதிர்ப்பு வந்தது. சிறிது காலத்திற்குப் பிறகு அங்கிருந்து வந்த ஓர் இளைஞர் கூறினார். இந்த அஹ்மதிகள் உண்மையாளர்கள் அல்ல எனில் அவர்களை துன்பத்தால் பீடிப்பாயாக. அஹ்மதிகள் உண்மையாளர்களாயின் எதிர்ப்போரைத் துன்பத்தில் போடுவாயாக. அதனை ஓர் அடையாளம் ஆக்குவாயாக. இந்த வகையில் ஐந்து நாட்களுக்குப் பிறகு நான் பார்த்தேன். எதிரிகளுள் இருவர் நோயுற்றனர். கடுமையான துன்பத்திற்குள்ளாகி இறந்தனர். பிறகு இந்த ஜமாஅத் இறைவன் புறமிருந்து வந்த ஜமாஅத் என்று உறுதி ஏற்பட்டது. நான் உண்மையான உள்ளத்துடன் ஈமான் கொண்டு அஹ்மதியாகிறேன்.

***பிறகு புர்கினோஃபாஸோவில் துத்கு மண்டலத்திலிருந்து எழுதுகின்றார்:***

தப்லீகிற்காக பல்வேறு ஊர்களுக்கு சுற்றுப்பயணம் செய்தோம். ஓர் ஊருக்குச் சென்றோம். அங்கு நமது நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள் இருந்தனர். அங்கிருந்தவர்கள் கூறினார். முரப்பி சாஹிப் நீண்ட நாளாக இங்கு மழையில்லை. பயிர்களை நாங்கள் விளைவிக்க முடியவில்லை. எளியவன் கூறினேன். நான் துஆ செய்கிறேன். மழைத் தொழுகை தொழுகிறேன். 10.00 மணிக்கு மழைத் தொழுகை நடைபெறும். ஊரிலுள்ள எல்லா குழந்தைகள் பெரியவர்கள் எல்லாருக்கும் தகவல் தெரிவித்து விடுங்கள். தகவல் தெரிவிக்கப்பட்டது. அஹ்மதி அல்லாதவர்களும் அவர்களது இமாமும் இதில் கலந்து கொள்ளவில்லை.

கூறுகின்றார்: அத்தொழுகையில் நாங்கள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பொருட்டால் துஆ செய்தோம். என் இறைவா! இந்த மக்களின் பூமியின் தாகத்தை தணிப்பாயாக! எங்களது துஆவை கேட்பாயாக! இன்றே இந்த ஊர்க்காரர்களுக்கு அக்காட்சியைக் காட்டுவாயாக!

இறைவன் அஹ்மதி குழந்தைகள் பெரியவர்களின் துஆவைக் கேட்டான். அதே இரவில் பெருமழை பெய்தது. கூறுகிறார்கள்: தொழுது விட்டு நாங்கள் வேறு ஊருக்கு தப்லீக் செய்ய போய் விட்டோம். சுபுஹ் நேரத்தில் அந்த ஊர் மக்கள் தகவல் தெரிவிக்க வந்தனர். இறைவன் எமது ஊரில் மழையைத் தந்தான். முதன் முதலாக பெருமழை பெய்துள்ளது. அல்லாஹ்வின் பேரருளாக இருந்தது. இது கண்டு அஹ்மதி அல்லாதோர் முஸ்லிம் அல்லாதோர் கிறித்தவர்கள் பெரும் தாக்கத்திற்கு உள்ளாயினர். அவர்கள் இங்கு தொழுகை நடந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அதன் விளைவாக அங்கு 90 பைஅத்துகள் நடந்தன.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

நமது ஜமாஅத்திற்கு இறைவனுடன் உண்மையான தொடர்பு இருக்க வேண்டும். இறைவன் அவர்களை அப்படியே விட்டு விடவில்லை. அதற்காக நன்றி செலுத்த வேண்டும். அவர்களின் ஆன்மீக சக்தியை நிச்சய உறுதியின் பக்கம் வளர்ப்பதற்காக தமது வல்லமையின் நூற்றுக்கணக்கான அடையாளங்களைக் காட்டினான்.

நம்மை அல்லாஹ்வுடன் உண்மையான தொடர்பு கொள்பவர்களாக ஆக்குவானாக! அல்லாஹ் நம்மில் ஒவ்வொருவரையும் தனது அடையாளங்களைக் காட்டுபவர்களாக்குவானாக! நமது ஈமானை அதிகரிப்பவர்களாக்குவானாக! இறைவனுடன் உண்மையான தொடர்பை ஏற்படுத்துபவராகவும் இருப்போமாக! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் செய்த பைஅத்திற்கு கண்ணியம் செய்வோமாக! அல்லாஹ் நமது சந்ததிகளிலும் ஈமானை நிலைநிறுத்தி அதிகரிக்கவும் செய்வானாக!

இப்போத ஒரு வருத்ததிற்குரிய செய்தி இரு ஜனாஸா ஜுமுஆவிற்குப் பிறகு தொழ வைப்பேன். முதல் ஜனாஸா, கண்ணியத்திற்குரிய ரஸியுத்தீன் சாஹிப். கண்ணியத்திற்குரிய முஹம்மது ஹுஸைன் சாஹிபின் மகன். இவரை 8 பிப்ரவரி 2014 –ல் வேலைக்குச் செல்வதற்காக வீட்டை விட்டு வெளியில் சென்ற போது ஷஹீது ஆக்கப்பட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் கராச்சியில் இருந்தார். கராச்சியில் அன்று பந்த் அறிவிக்கப்பட்டிருந்தது. இவரது மனைவி வேலைக்குப் போக வேண்டாம் என்று கூறியிருந்தார். இருந்தும் வேலைக்குப் போகத் தயாரானார். வீட்டுக்கு வெளியில் கொஞ்ச தூரம் தான் போயிருப்பார். அடையாளம் தெரியாத மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் துப்பாக்கிச்சூடு செய்தனர். ஒரு குண்டு கழுத்தில் பட்டு மூச்சுக்குழாய் காயமடைந்தது. சகோதரர் மகன் கூடவே இருந்தார். தகவல் தெரிவிக்க வீட்டிற்கு சென்றார். மனைவி உடனே மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார். மருத்துவர்கள் முடிந்த எல்லா முயற்சியும் செய்தனர். ஆனால் கண்ணியத்திற்குரிய ரஸியுத்தீன் சாஹிப் காயத்தால் ஷஹாதத்தின் பானத்தை அருந்தி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். முஹம்மது ஹுஸைன் முக்தார் உடைய மகன் இவரது குடும்பம் காஷ்மீர், பூஞ்ச் மாவட்டத்திலுள்ள மேண்டர் பகுதியாகும். மேண்டரின் இரு பெரியவர்கள் காதியான் சென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருந்தனர். திரும்பி வந்து தப்லீக் செய்தனர். அதன் விளைவாக ஷஹீது மர்ஹூம்

உடைய கொள்ளுத் தாத்தா பெயர் கண்ணியத்திற்குரிய முக்தார் அஹ்மது சாஹிப். தந்தை முஹம்மது ஹுஸைன் முக்தார். பாகிஸ்தான் நிறுவப்பட்ட பிறகு இக்குடும்பம் கோயி மாவட்டத்தில் குடியேறியது. பிறகு 1992 –ல் கராச்சிக்கு வந்தது. எஃப்.ஏ. வரை படித்தார். பிறகு 6 வருடங்களாக ஒரு தொழிற்சாலையில் வேலை செய்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 26. மிகவும் கருணையும் தூய்மையும் வாய்ந்தவர். நல்லொழுக்கம் உடையவர். கிலாஃபத்துடன் பேரன்பு இருந்தது. ஜமாஅத் பொறுப்பாளர்கள் ஜமாஅத் அன்பர்களை மிகவும் கண்ணியம் செய்வார். சண்டை சச்சரவு ஒருபோதும் செய்ததில்லை. ஜமாஅத் அல்லாதவர்கள் கூட ஷஹாதத்திற்குப் பிறகு இவரைப் பற்றி கூறும்போது எவருடனும் ஒருபோதும் இவர் சண்டை சச்சரவு செய்ததில்லை என்று கூறியுள்ளனர். ஒருபோதும் இவர் குறை கூற வாய்ப்பளித்ததும் இல்லை. மீண்டும் மீண்டும் ஷஹாதத்திற்கு விருப்பம் தெரிவித்தார். ஷஹாதத்திற்கு சில நாட்களுக்கு முன் கனவில் பார்த்தார். ஒரு பையன் கோடாரியுடன் வந்து தாக்குதல் தொடுக்கிறார். அதனுடன் இவரது கண் திறந்து விட்டது. ஷஹாதத்திற்கு 2 நாட்களுக்கு முன் இவரது மனைவி கனவில், ஷஹாதத் மர்ஹூமிற்கு திருமணம் நடப்பதாக கனவில் கண்டார். திடீரென்று வீட்டில் ஜனாஸா கிடைப்பதாக பார்க்கிறார். ஓடிப்போய் எனது பெற்றோர் வீட்டிற்குப் போகிறேன். அதுவும் அருகில் தான் உள்ளது. அங்கும் ஒரு ஜனாஸா கிடைக்கிறது. உடனே கண் திறந்து விட்டது என்று கூறுகிறார். ஷஹீது மர்ஹூமின் தந்தை கனவில் பார்த்தார். அவரது மூத்த மகன் முஹம்மது வந்து கூறுகிறார். உங்களுக்கு 17 நாள் தான் அவகசாம் உள்ளது.

அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார். மஸ்ஜிதில் குத்தாமுல் அஹ்மதிய்யாக சார்பாக டியூட்டி இருக்கும் என்றால் இவர் டியூட்டி கொடுப்பவராக இருந்தார். நல்ல செயல் திறன் கொண்டவராக இருந்தார். இவரது தந்தைக்கு வயது 80. வாதநோயால் பாதிக்கப்பட்டு 4 வருடங்களாக இயலாமல் இருக்கிறார். தனது குடும்பத்தை இவர் ஒருவரே கவனித்து வந்தார். பெற்றோரையும் குழந்தைகளையும் இவரே கவனித்து வந்தார். சகோதரருக்கு மிரட்டல் வருகின்றன. எனவே அங்கிருந்து சென்று விட்டார். அவர்கள் சென்ற பிறகு மிரட்டல் வர ஆரம்பித்தன. இவரது பெற்றோர்கள் தவிர மனைவி நுஸ்ரத் ஜமீன் சாஹிபா உள்ளார். பிள்ளைகள் அத்தியத்துல் நூர் 7 மாதங்கள் இவருக்கு ஆகிறது. ஒரே ஒரு மகள் தான். சகோதரருக்கு மகன்கள் உள்ளனர்.

அல்லாஹ் அவருக்கு ஷஹாதத்தின் உயர்வை வழங்குவானாக! பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் பொறுமையை வழங்குவானாக!

இரண்டாவது ஜனாஸா டாக்டர் காலித் யூசுஃப் சாஹிப். 7 பிப்ரவரி 2014 அன்று ரப்வாவிலுள்ள ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் தனது 46வது வயதில் வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். டாக்டர் மூஸி ஆவார். பெஹஷ்தி மக்பராவில் ரப்வாவில் நல்லடக்கம் செய்யப்பட்டார். தந்தை ஷேக் முஹம்மது யூசுஃ சாஹிப் நவாப்ஷாவின் மாவட்ட அமீர் ஆக இருந்தார். 9 டிசம்பர் 2008 –ல் ஷஹீது ஆக்கப்பட்டார். தாயார் நஷாப்ஷாவில் உள்ளார். அல்லாஹ் இவருக்கு 3 மகள்கள், 1 மகனை வழங்கி இருந்தான். அமத்துஷ்ஷயி, அத்பா யூசுஃப், அயான் அஹ்மது – மகன் 9 வயது. இமான் காலித் – வயது 5. அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக! குழந்தைகளுக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக! தனது பாதுகாப்பில் வைப்பானாக!

நவாப்ஷாவிலிருந்து தந்தையாரின் ஷஹாதத்திற்குப் பிறகு இங்கு வந்தார். நல்ல டாக்டர். ஏழைகளுக்கு நன்கு சேவை செய்து வந்தார். நவாப்ஷா பகுதியின் நிலை மோசமாகி விட்டதால் ரப்வாவிலுள்ள மருத்துவமனைக்கு வந்து விட்டார். E.N.T. டாக்டர். நோயாளிகளை நன்றாக கவனிப்பார். மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலும் அங்குள்ள 80 நோயாளிகளைப் பார்த்தார். நல்ல உணர்வுள்ளவர். அல்லாஹ் அவரது தகுதியை உயர்த்துவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **14.02.2014**

Translated by : Muallim M. NIZAMUDEEN Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456